## இந்தியாவின் 71 ஆவது சுதந்திர தின பூர்த்தி

## இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் மேதகு தரண்ஜித் சிங் சந்து அவர்களுடனான நேர்காணல்

### *“எமக்கு, இலங்கை விசேடமானது…”*

**கே 1. இன்று இந்தியா தனது 71 ஆவது சுதந்திர தினத்தை பூர்த்தி செய்கின்றது. இந்த விசேட தினத்தில் உங்களது சிந்தனைகள் என்னவாக உள்ளது?**

இந்தியா, அதன் 71 ஆவது சுதந்திர தினத்தை பூர்த்தி செய்யும் இந்தத் தருணத்தில், இந்திய சமூகத்தின் எனது சக உறுப்பினர்களுக்கும் மற்றும் இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் சிநேகபூர்வமிக்க மக்கள் மற்றும் அரசாங்கம் என்பவற்றுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன்.

குறைந்த பொருளாதார வளங்களுடனான ஓர் இளம் சுதந்திர தேசம் என்ற நிலையிலிருந்து இன்று உலகின் விரைவாக வளர்ந்து வரும் பொருளாதாரமாக, இந்தியா மாற்றமடைந்துள்ளது. என்னைப் பொறுத்த வரை, இந்தியாவின் மிகவும் முக்கியமான சாதனையாக உள்ளது அதன் ஜனநாயகம் மற்றும் பன்மைத்துவம் என்பவற்றின் வெற்றியாகும்.

இது ஒரு பெரும் சாதனை. நீங்கள் அறிந்தது போன்று, இந்தியா 1.25 பில்லியன் மக்களின் தாயகமாக உலகின் மிகவும் சிக்கலான மற்றும் பன்மைத்துவம் கொண்ட சமூகமாக அநேகம் உள்ளது. இந்தியாவில் 1,652 க்கும் மேற்பட்ட மொழிகள் மற்றும் பேச்சுவழக்கு முறைகள் உள்ளன. ஜனநாயக கட்டமைப்புகளின் கீழ் இந்த பன்மைத்துவத்தின் இந்தச் செழுமையான பல வண்ணங்களை இந்தியா பேணக்கூடியதாக உள்ளது. அபிவிருத்தி நோக்கியதான எங்களது பயணத்தில் ஒவ்வொருவரையும் கூடவே எங்களுடன் அழைத்துச் செல்வதை நாங்கள் உறுதியாக நம்புகிறோம்.

பொருளாதார அபிவிருத்தி எங்களுக்கு முக்கியமானதாக இருக்கையில், தனியே தன்னலம் சார்ந்த ஒரு தன்மையினால் ஆளப்படுபவர்களாக நாங்கள் இல்லை என்பதையும் இங்கு நான் சுட்டிக் காட்டுவதற்கு விரும்புகிறேன். எங்களது பாராளுமன்றத்தின் நுழை வாயிலில், ‘உலகம் ஒரு குடும்பம்’ எனும் பொருள்படும் வாசகத்தை நாங்கள் செதுக்கியுள்ளோம். உங்களுடனும், ஒவ்வொருவருடனும் முன்நோக்கி நகர்வதற்கு நாங்கள் விரும்புகிறோம். *ஒன்றாக, நாங்கள் முன்னேறுவோம் என்பதையே இதன் நோக்கம் சுட்டி நிற்கிறது.*

**கே 2. அண்மையக் காலங்களில் இந்திய - இலங்கை இரு தரப்பு அபிவிருத்திகளை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

எங்களுக்கு, இலங்கை விசேடமானது. அந்த உணர்வு பரஸ்பரமானதொன்றெனக் காண்பதில் நாங்கள் பெருமை கொள்கிறோம். எங்களது பிணைப்பின் விசேடமான தன்மையைப் பிரதிபலிக்கும் பல உதாரணங்களை என்னால் விபரிப்பதற்கு முடியும்.

2015 இல் பிரதம மந்திரி மோடியின் இலங்கைக்கான விஜயம், 28 வருட இடைவெளியின் பின்னர் இந்தியப் பிரதம மந்திரியொருவரினால் இலங்கைக்கு மேற்கொள்ளப்பட்ட ஒரு முதலாவது

விஜயமாக இருந்தது. முதல் தடவையாக இலங்கை ஏற்பாடு செய்த சர்வதேச வெசாக் தின கொண்டாட்டங்களுக்காக, அவர் மீண்டும் இலங்கைக்கு 2017 மே மாதத்தில் விஜயம் செய்தார். இரண்டு வருடங்களில், இரண்டு தடவைகள் பிரதம மந்திரி மோடியின் இலங்கைக்கான விஜயம், ஓர் இந்தியப் பிரதம மந்திரியினால் முன்னொருபோதும் மேற்கொள்ளப்படாத ஒன்றாக இருந்தது.

இலங்கையின் ஜனாதிபதி, பிரதம மந்திரி மற்றும் வெளிநாட்டு அமைச்சர் ஆகிய மூவரும் தங்களது முதலாவது உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயத்தின் செல்லுமிடமாக இந்தியாவைத் தெரிவு செய்தமை மகிழ்ச்சியளிப்பதாக உள்ளது.

புது டெல்லியில் 2018 மார்ச்சில், நடைபெற்ற சர்வதேச சூரிய மின்சக்தி நாடுகள் கூட்டணியின் ஆரம்ப மாநாட்டில் ஜனாதிபதி மைத்திரிபால சிரிசேன கலந்து கொண்டார். இந்த ஆரம்ப மாநாடு இந்தியப் பிரதம மந்திரி நரேந்திர மோடி மற்றும் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவல் மக்ரோன் ஆகியோரினால் இணைத் தலைமை தாங்கப்பட்டது. இலங்கையில் சூரிய மின் செயல்திட்டங்களை மேற்கொள்வதற்கு $100 மில்லியன் கடன் வசதி அறிவிக்கப்பட்டது.

நவெம்பர் 2017 இல், முதல் தடவையாக பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்திக்கான ஸ்தாபனத்திற்கு (OECD) வெளியே, புதுடெல்லியில் நடைபெற்ற சைபர் ஸ்பேஸ் தொடர்பான உலக மாநாட்டில் (GCCS 2017) பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்கவின் கலந்து கொள்ளுதல், விசேடமானதாக இருந்தது.

நாங்கள் பெருமை கொள்ளும் வகையில், அண்மைக் காலங்களில் நிகழ்ந்த வேறும் பல முதலாவது நிகழ்வுகள் உள்ளன: தெற்காசியச் செய்மதியின் ஒரு பங்குதாரராக இருப்பதற்கு இணங்கிய முதலாவது தெற்காசிய நாடு இலங்கையாகும். இலங்கை அண்மையில் தேசிய அறிவு வலையமைப்பில் (NKN) இணைந்து கொண்டமை, சார்க் பிராந்தியத்தில் அவ்வாறு இணைந்து கொண்ட முதலாவது நாடு என்ற பெருமையை பெற்றுத் தருகிறது. இதனூடாக இந்தியா மற்றும் அதற்கப்பாலுள்ள சுமார் 1600 பல்கலைக் கழகங்களுடன் எண்ணிம ரீதியிலான அணுகுவழிகளை இலங்கைப் பல்கலைக் கழகங்கள் தற்பொழுது கொண்டிருக்கும்.

இந்த வருடத்தின் ஜனவரியில் எங்களது தகவல் தொழில்நுட்ப அமைச்சரின் இலங்கை விஜயத்தின் போது, எங்களது தேசிய தகவல் மையத்தினால் உருவாக்கப்பட்ட இலத்திரனியல் - அலுவலம் தொடர்பிலான ஒரு முன்னோடித் திட்டத்தை நாம் ஆரம்பித்தோம். அதில், இலங்கை பொதுப் பணித்துறையில் முதல் தடவையாக ஒரு இலத்திரனியல் அரச ஆவணம் எண்ணிம ரீதியாக கையொப்பமிடப்பட்டது.

இவ்விதமாக நான் கூறிக் கொண்டே செல்லலாம்…

**கே 3. இலங்கையிலுள்ள பலரும் இலங்கைக்கான இந்தியாவின் அபிவிருத்தி உதவிகள் இலங்கையின் ஒரு சில பகுதிகளுக்கு மாத்திரமே மட்டுப்படுத்தப்பட்டவையாக உள்ளன என நினைக்கிறார்கள். அது உண்மையா?**

இலங்கையுடனான எங்களது பங்குடமைகள் இலங்கையின் சொந்த முன்னுரிமைகளின் அடிப்படையிலானவை. இலங்கைக்கான மொத்த அபிவிருத்தி உதவிகள் US$ 3 பில்லியன்களை அண்மித்தவையாக உள்ளன என்பதுடன் அவற்றுள் US$ 500 மில்லியன்களுக்கும் அதிகமான

தொகை தனியே நன்கொடைகளாகும். இவை வெறுமனே இலக்கங்கள் மட்டுமல்ல என்பதை நான் உங்களுக்கு கூறிக் கொள்வதற்கு விரும்புகிறேன்.

எங்களது செயற்றிட்டங்கள் தனித்துவமானவை. இலங்கையுடன் இணைந்து செயற்றிட்டங்களை மேற்கொள்வதை நாங்கள் நம்புகிறோம், அங்கே இலங்கையும் செயற்றிட்டத்தின் ஒரு பங்காளராக இருக்கும். எங்களது செயற்றிட்டங்கள் மக்கள் குறித்தானவை. சாதாரண மக்களின் வாழ்க்கை மீது அவை நேரடியான ஒரு தாக்கத்தைக் கொண்டிருக்கும்.

இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கிய வகையில் மக்கள் நலன் சார்ந்த சுமார் 70 சிறிய அபிவிருத்திச் செயற்றிட்டங்களை இந்தியா பூர்த்தி செய்துள்ளது. சுமார் 20 செயற்றிட்டங்கள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவை ஒரு துறைக்கோ அல்லது ஒரு பகுதிக்கோ மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்டவையல்ல. வடக்கிலிருந்து தெற்கிற்கும் மற்றும் மேற்கிலிருந்து கிழக்கிற்குமென, நாட்டின் அனைத்துப் பகுதிகளுக்கும் பரவியதாக அவையுள்ளன. அநுராதபுரத்தில் ஒரு புதிய கிராமத்தின் அபிவிருத்தி, பொலன்னறுவையில் மும்மொழிப் பாடசாலை போன்ற பாடசாலைகளின் நிர்மாணம், ஸ்ரீ தலதா மாளிகாவின் கீழ் ஒரு கண்டிய நடனப் பயிற்சிப் பாடசாலையின் உருவாக்கம், ஹம்பாந்தோட்டையில் விவசாய மற்றும் மீனவ சமூகத்திற்கான வாழ்வாதார உதவி வழங்குதல், மாத்தறை ருகுணு பல்கலைக் கழகத்தில் 1500 இருக்கை வசதி கொண்ட ஒரு கேட்போர் கூட நிர்மாணம், யாழ்ப்பாணத்தில் மழை நீர் சேகரிப்புத் தாங்கிகளின் நிர்மாணித்தல், மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகாதார வசதிகளின் மேம்படுத்துதல் என்பவை எல்லாம் இதற்கான உதாரணங்களாகும். இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் ஒரு மாதிரிக் கிராமத்தை உருவாக்குவதிலும் நாங்கள் ஈடுபட்டுள்ளோம்.

இலங்கையில் இந்திய வீடமைப்புத் திட்டம், வெளியிலுள்ள எந்தவொரு நாட்டிலும் இந்திய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படுகின்ற மிகப் பெரிய நன்கொடை உதவித் திட்டமாகும். வடக்கு மற்றும் கிழக்கில் 46,000 வீடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன, சுமார் 14000 வீடுகள் மலைநாட்டு பெருந்தோட்டப் பகுதிகளில் நிர்மாணிக்கப்பட்டு வருகின்றன. இந்திய - இலங்கை நட்புறவின் மிகுந்த நட்சத்திர அந்தஸ்து கொண்ட உதாரணங்களில் ஒன்றாகவுள்ள மற்றுமொரு செயற்றிட்டம் ஆயிரம் மனித வாழ்வுகளைக் காப்பாற்றுவதற்கு பங்களித்த, அவசரநிலை இலவச நோயாளர் காவுவண்டிச் சேவையாகும். இச்சேவையின் நாடு முழுவதிற்குமான விஸ்தரிப்பு அண்மையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்தியா அதன் வாக்குறுதிகளை ஒரு கால முறைப்படி பூர்த்தி செய்வதற்கு இயலுமாகவிருந்தது.

இலங்கையில் ரயில்வேத் துறையின் அபிவிருத்திக்காக சுமார் US$ 1.3 பில்லியன் பெறுமதியான கடன் வசதிகளுக்கு இந்தியா பற்றுறுதி கொண்டுள்ளது. தசாப்த கால மோதல்களின் பின்னர் வடக்கையும் தெற்கையும் இணைக்கும் பிரதான புகையிரதப் பாதைகளின் மீள்திருத்த வேலைகள், இந்திய சலுகையடிப்படையிலான நிதியளித்தல்களின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. சுனாமியினால் பாதிக்கப்பட்ட தெற்கு புகையிரதப் பாதையும் இந்தியக் கடன் திட்டத்தின் கீழ் மேம்படுத்தப்பட்டது. புகையிரத எஞ்சின்கள் மற்றும் பெட்டிகள் என்பவற்றையும் கூட இந்தியா வழங்கியதுடன் இலங்கைப் புகையிரதப் பணியாட்களின் செயற்றிறனைக் கட்டி யெழுப்புவதற்கும் பங்களித்தது. வடக்கில் காங்கேசன்துறைத் துறைமுகத்தை மேம்படுத்துவதற்கும் நாங்கள் சுமார் US$ 45 மில்லியன்களை வழங்குகிறோம்.

இலங்கையில் குடிநீர் விநியோகம் மற்றும் கழிவுநீர் முகாமைத்துவம் தொடர்பான செயல் திட்டங்களில் இந்திய நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளன. ஏற்றுமதி-இறக்குமதி (எக்ஸிம்) வங்கியூடாக சுமார் US$ 600 மில்லியன்கள் பெறுமதியான செயல்திட்டங்கள் தற்போது நடைமுறைப் படுத்தப்பட்டு வருகின்றன.

எங்களால் முடிந்த வகையில் இலங்கைக்கு உதவுவதற்கு நாம் தயாராக உள்ளோம். நாங்கள் ஒரு துறை அல்லது பிரதேசம் என்பவற்றினால் வழிநடத்தப்படுவதில்லை. எங்களிடமிருந்து இலங்கை வேண்டுமென்கிறதிற்கு அமைய நாங்கள் செயல்படுகிறோம்.

**கே 4. சுதந்திர வர்த்தக உடன்படிக்கை (FTA) இலங்கையை விட இந்தியாவிற்கு அதிகம் உதவியுள்ளதா?**

இந்தியாவும் இலங்கையும் 2000 ஆம் ஆண்டு சுதந்திர வர்த்தக உடன்படிக்கை செய்து கொண்ட போது, அது எங்களிரு நாடுகளுக்குமே முதற் தடவையானது என்பதை நீங்கள் நினைவில் கொள்ளுதல் வேண்டும். பொருளாதார ஒருங்கிணைவின் முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டவர்கள், என்ற ஒரு வகையில் நாங்கள் இதில் முன்னோடிகளாக உள்ளோம். அதிலிருந்து இரு தரப்பு வர்த்தகம் 8 மடங்குகளுக்கும் அதிகமாக அதிகரித்துள்ளது. வர்த்தக நிலுவை இந்தியாவிற்குச் சாதகமாக உள்ள காரணத்தினால், சுதந்திர வர்த்தக உடனபடிக்கை இலங்கையை விட இந்தியாவிற்கு அதிகம் உதவியுள்ளது என்றொரு கண்ணோட்டம் அங்கேயுள்ளது. இந்தக் கண்ணோட்டம் முற்றிலும் தவறானது. எந்தவொரு வர்த்தக பொருளாதார நிபுணரும் இதனை உங்களுக்கு கூறுவார். சுதந்திர வர்த்தக உடன்படிக்கை வர்த்தக நிலுவை யாருக்குச் சாதகமாக உதவியுள்ளது என்பதைக் கூறுவதற்கான ஒரு சுட்டியல்ல.

இது தொடர்பிலான விபரங்களை ஒருவர் நோக்குதல் வேண்டும். சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இந்தியாவிற்கான இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களின் பங்கினை நீங்கள் நோக்கினால், அது 2000 ஆம் ஆண்டின் 16% இலிருந்து அண்மைய வருடங்களில் 65% இற்கும் மேலாக அதிகரித்துள்ளது. இந்தியாவிற்கான இலங்கை ஏற்றுமதியின் பெரும்பாலானவை உண்மையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் மூலமானது என்பதையே இது அர்த்தப் படுத்துகிறது.

மறுபுறத்தே, இலங்கைக்கான இந்திய ஏற்றுமதிப் பொருட்களின் பங்கு 2000 ஆம் ஆண்டின் 9% இலிருந்து அண்மைய வருடங்களில் வெறுமனே 13% ஆக மட்டுமே அதிகரித்துள்ளது. இது, இலங்கைக்கான இந்திய ஏற்றுமதிகளின் பெரும்பாலானவை சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு வெளியேயானவை என்பதையே எடுத்துக் காட்டுகின்றது.

மொத்தத்தில், எங்களது கவனம் எங்களது வர்த்தகம் மற்றும் முதலீடுகள் என்பவற்றின் பாய்ச்சல்களை மேலும் உயர்ந்த மட்டங்களிற்கு எவ்வாறு எடுத்துச் செல்வது என்பதில் இருத்தல் வேண்டும். இந்திய-இலங்கை உறவுகளை ஒரு பரிவர்த்தனை ரீதியிலான வில்லையூடாக மட்டும் நான் பார்ப்பதில்லை.

**கே 5. இந்தியாவுடனான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கை (எட்கா) இந்த வருட இறுதியில் முடிவு செய்யப்படும் என அறிவிக்கப்படுகின்றது. இலங்கையில் ‘எட்கா’ தொடர்பில் பெரும் சர்ச்சைகள், கரிசனைகள் உள்ளன. இது பற்றி உங்களது பிரதிபலிப்பு எப்படியாக உள்ளது?**

உங்களுக்கு சௌகரியமான கதியிலேயே நாங்கள் நகருவோம், இதனைக் கடந்த காலத்திலும் பல தடவைகள் நான் சொல்லியுள்ளேன். அது பற்றி நாங்கள் ஒரு தெளிவிற்கு வருவோம்: வெளிப்படையான காரணங்களுக்காக முழு உலகுமே இந்திய சந்தையை நோக்கிய வண்ணமுள்ளது.

உலக ரீதியாக, நாடுகள் தீர்வைத் தொடர்புகள் அடிப்படையிலான வர்த்தகத்திலிருந்து விலகி முதலீட்டுத் தொடர்புடன் கூடியதான வர்த்தகப் பாய்ச்சல்களுக்கு நகர்ந்து செல்வதை நாங்கள் கண்டுள்ளோம். இரு தரப்புப் பின்னணியில் இதன் நன்மைகளை நாங்கள் பார்த்திருக்கிறோம் என்பதுடன் இதனை அதிகரித்துக் கொள்வதற்கு நாங்கள் ஒன்றிணைந்து செயலாற்றுதல் வேண்டும். சுதந்திர வர்த்தக உடன்படிக்கையின் செயல்படுத்துதல் தொடர்பில் கடந்த காலத்திலிருந்து நாங்கள் கற்றுக்கொள்வதற்கு பாடங்கள் இருந்தால், நாங்கள் அவற்றை நிச்சயமாகப் பார்த்தல் வேண்டும். நாங்கள் அது பற்றி திறந்த மனதுடன் உள்ளோம். இந்த முழுமையான செய்முறைமை சுமுகமானதாக, விரைவானதாக மற்றும் சௌகரியமானதாக இருப்பதற்கு நாங்கள் விரும்புகிறோம்.

இரண்டு நாடுகளுக்குமே சேவைத்துறை சம அளவில் முக்கியமானது. அது, இந்தியாவின் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் சுமார் 64% இற்கும் மற்றும் இலங்கையின் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சுமார் 56% இற்கும் பங்களிக்கின்றது. ஒரு சேவை எப்பொழுது வழங்கப்படுகின்றது என்பதை நாங்கள் அநேகம் உணர்ந்து கொள்வதில்லை. உதாரணத்திற்கு, சுமார் இந்தியாவிற்கும் மற்றும் இந்தியாவிலுமிருந்தான விமானச் சேவைகளின் 80% ஆனவை இந்தியாவிலிருந்தான விமான சேவைகளை விட, சிறிலங்கன் எயர்லைன்ஸ் விமான சேவையினாலேயே வழங்கப் படுகின்றது. இந்தியாவில் சுமார் 14 நகரங்களிற்கு சேவையளித்த வண்ணம், சிறிலங்கன் எயர்லைன்ஸ் இந்தியாவில் மிகப் பெரிய வெளிநாட்டு விமான சேவையாக வந்துள்ளது.

அதைப் போன்றே, கொழும்புத் துறைமுகத்தின் கப்பற் போக்குவரத்துகளின் 70% இற்கும் அதிகமானவை இந்தியா தொடர்பானவை, இந்தியா ஏற்றுமதியாளர்கள் மற்றும் இறக்கு மதியாளர்களுக்கு தெளிவான வகையிலான ஒரு சேவையாக உள்ளது. அது, தெளிவான முறையில், இலங்கை சேவைத்துறையில் பலமானதாக உள்ளது. எங்களது பொருளாதார ஈடுபாடுகள் அதிகரிக்கையில், சேவைத் துறையிலும் கூட அதிகளவிற்கு ஒத்துழைப்பதற்கான வழிவகைகளை நாங்கள் கண்டறிதல் வேண்டும்.

அது பற்றி அங்கு சந்தேகம் இருக்க வேண்டாம்: நாங்கள் இலங்கையின் சொத்துக்கள், வளங்கள், வேலைகள் அல்லது சந்தை என்பவற்றுக்காக போட்டியிடவில்லை. மறுபுறத்தே, உலக வளர்ச்சி தூண்களிலொன்றான இந்தியாவிற்கு அருகிலிருப்பதினால், இலங்கை அதிகம் நன்மை பெறுவதற்குள்ளது.

**கே 6. உங்களது பல உரைகளில், இலங்கைக்கு இந்தியாவின் வளர்ச்சியிலிருந்தும் மற்றும் பூகோள ரீதியாக இந்தியாவிற்கு அண்மையிலிருப்பதன் மூலமாகவும் எழும் நன்மைகள் பற்றி நீங்கள் கதைத்துள்ளீர்கள். இந்தியாவிலுள்ள பெரும் சந்தையை இலங்கை எவ்வாறு அணுகுவதற்கு முடியும்?**

இந்தியாவின் பொருளாதார நிலைமாற்றத்தின் அளவும் வேகமும் அனைவருக்குமான வாய்ப்புகளை வழங்குகின்றது. இலங்கைக்கு, அதன் வரலாற்று ரீதியான தொடர்புகள் மற்றும் நெருங்கிய பூகோள அமைவிடம் என்பவற்றினால், இந்த வாய்ப்புகள் மிகவும் குறிப்பிடத் தக்கவகையில் சாதகமாக உள்ளன.

பெரும் இந்திய நிறுவனங்களின் விநியோக மற்றும் பெறுமதிச் சங்கிலிகளில் ஒரு பகுதியாக இருப்பதற்கு இலங்கை நிறுவனங்களை நாம் ஊக்குவிக்கிறோம். இது இலங்கையிலிருந்து மூலவளங்களிற்கு இந்திய நிறுவனங்களை ஆர்வங் கொள்ள வைக்கும்.

குறிப்பாக விசேட உற்பத்திகளுக்கு, இலங்கைப் பொருளாதாரம் சிறந்த வலுவைக் கொண்டுள்ளது. இலங்கை வியாபாரங்கள் பல இதனை விளங்கிக் கொண்டுள்ளமை மற்றும் இந்தியா போன்ற ஒரு பெரிய மற்றும் போட்டித்தன்மையான சந்தையில் அவை நன்கு செயற்படுவது குறித்தும், நான் மகிழ்ச்சி கொள்கிறேன். இலங்கை நிறுவனமொன்று ஒரே தடவையில் இந்தியா முழுவதிலுமான பிரசன்னத்தை ஸ்தாபிப்பதென்பது கடினமானதொன்றாக இருக்கலாம். பரந்த உள்ளூர்ச் சந்தை மீது கவனம் செலுத்தும் பல இந்திய நிறுவனங்கள், இலங்கைச் சந்தையில் உள்ள வாய்ப்புகள் பற்றி அறியாதிருக்கலாம்.

இந்திய வர்த்தக சமூகத்தை எட்டுவதற்கு உங்கள் அனைவரையும் நாங்கள் ஊக்கப் படுத்துகிறோம். இலங்கை நிறுவனங்களுக்கு எங்களால் முடிகின்ற அனைத்தையும் செய்வதற்கு உயர் ஸ்தானிகராலயத்தில் நாங்கள் தயாராக உள்ளோம்.

**கே 7. இந்தியா மற்றும் இலங்கைக்கிடையில் திறன் விருத்தி மற்றும் இளைஞர் பரிமாற்ற செயல்திட்டங்கள் பற்றி உங்களது உரைகளில் அதிகமாக நீங்கள் பேசியுள்ளீர்கள். அதன் முழுமையான ஆற்றலை நாங்கள் உபயோகிக்கின்றோமா?**

இன்றைய வகுப்பறைகளில் தான் எங்களது நாளை உருவாக்கப்படுகிறது என்பதை நான் வலிமையாக நம்புகிறேன். கல்வி மற்றும் திறன் அபிவிருத்தி என்பன எங்களது இருதரப்பு உறவுகளின் பிரதான தூண்களிலொன்றாக உள்ளது.

இந்திய அரசாங்கம் இலங்கை மாணவர்களுக்கு, முன் பல்கலைக்கழக, பட்டப்படிப்பு, பட்டப்பின் படிப்பு மற்றும் கலாநிதிக் கற்கைகள் மேற்கொள்வதற்காக வருடாந்தம் 750 புலமைப் பரிசில்களை வழங்குகிறது.

கடந்த வருடத்திலிருந்து, தகுதி வாய்ந்த இலங்கை மாணவர்கள் கற்பதற்கு எங்களது முன்னணி தொழில்நுட்பக் கல்வி (IITS) நிறுவனங்களைத் திறந்து விட்டுள்ளோம். கடந்த வருடம் மே மாதத்தில் முதல் தடவையாக கொழும்பில் இணைந்த IIT நுழைவுத் தேர்வுகள் நடைபெற்றது. இந்திய மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவம் மற்றும் பல் மருத்துவத் துறைகளில் அனுமதி பெறுவதற்கு தேசியத் தகுதிகாண் மற்றும் நுழைவுப் பரீட்சை (NEET-நீட்) எழுதுவதற்கு இலங்கை மாணவர்களும் கூட இப்பொழுது அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த வாய்ப்புகளின் பயன்களை இலங்கை இளைஞர்கள் முற்றிலுமாக எடுத்துக் கொள்வார்கள் என நாம் நம்புகிறோம்.

மேலதிகமாக, 1964 இலிருந்து இந்திய தொழில்நுட்ப & பொருளாதார ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் (ITEC) கீழ் முற்றிலும் நிதியளிக்கப்படும் குறுகிய கால பயிற்சி வாய்ப்புகளை இந்தியா வழங்கி வருகிறது. இந்த வருடம், இலங்கைக்கு ITEC இன் கீழ் சுமார் 400 இட ஒதுக்கீடுகளை நாங்கள் ஒதுக்கியுள்ளோம். இலங்கை அரசாங்க உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்துறை உறுப்பினர்கள் ஆகிய இரு தரப்புகளும் இந்த நிகழ்ச்சித் திட்டத்தை உபயோகிப்பதற்கு முடியும்.

இதற்கு மேலதிகமாக, இலங்கைக்கு என வடிவமைக்கப்பட்ட விசேட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களையும், நாங்கள் வேண்டுகோளின் பேரில் நடத்துகிறோம்.

இரு நாடுகளின் பாடசாலைகள் மற்றும் கல்லூரிகளிற்கிடையில் மாணவர் பரிமாற்ற நிகழ்ச்சித் திட்டங்களையும் நாங்கள் ஆரம்பித்துள்ளோம். உதாரணத்திற்கு, இந்தியாவின் சன்வாரில் 1847 இல் ஸ்தாபிக்கப்பட்ட லோரன்ஸ் பாடசாலையிலிருந்தான மாணவர்கள் சில மாதங்களிற்கு முன் கொழும்பிலுள்ள ரோயல் கல்லூரிக்கு (1835 இல் ஸ்தாபிக்கப்பட்டது) விஜயம் செய்தனர். இனி, கொழும்பிலுள்ள ரோயல் கல்லூரியிலிருந்து ஒரு மாணவர் குழு சன்வார் லோரன்ஸ் பாடசாலைக்கு செல்வார்கள். அத்தோடு டெல்லியிலுள்ள ஸ்ரீ ராம் வர்த்தகக் கல்லூரி மற்றும்

களனிப் பல்கலைக் கழகத்திற்கிடையிலும் ஒரு பிணைப்பு உள்ளது. அத்தகைய அதிகளவிலான நிகழ்ச்சித் திட்டங்களைக் கொண்டிருப்பதிலும் நாங்கள் ஆர்வமாக இருக்கிறோம்.

**கே 8. இந்தியா மற்றும் இலங்கைக்கிடையில் சுமுகமான இருதரப்பு உறவுகளுக்கப்பால், இரு நாடுகளுக்கும் இடையில் மீனவர் பிரச்சினை இன்னமும் திருப்தியான முறையில் தீர்க்கப் படுவதற்குள்ளது. இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்திய அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கைகளை எடுத்துள்ளதா?**

எந்தவொரு சவாலும் தீர்த்து வைக்கப்படுவதற்கு முடியாத ஒரு பெரும் பிரச்சினையல்ல என நான் வலுவாக நம்புகிறேன். எங்களது பரஸ்பர திருப்திக்கு அமைவாக இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பதற்கு இந்திய அரசாங்கமும் மற்றும் தமிழ்நாடு மாநில அரசும் ஒரு பல்முனை அணுகுமுறையைக் கடைப்பிடிக்கின்றன.

பாக்கு நீரிணைப் பகுதியில் இழுவைமடி மீன்பிடிப்பதிலிருந்து ஆழ்கடல் மீன்பிடிப்புக்கு மாறுவதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மார்ச் 2017 இலிருந்து பாக்கு நீரிணைப் பகுதி முழுவதிலும் இழுவைமடிப் படகுகளின் பதிவு செய்தல் தடைசெய்யப்பட்டுள்ளது.

மூக்கையூர் (மன்னார் வளைகுடாவில்) மற்றும் பூம்புகார் (வங்களா விரிகுடாக் கரையில்) US$ 40 மில்லியன் செலவில் புதிய மீன்பிடித் துறைமுகங்கள் நிர்மாணிக்கப்படுகின்றன - இவை இந்திய மீனவர்களை பாக்கு நீரிணையிலிருந்து அரபிக் கடல் அல்லது வங்காள விரிகுடாவிற்கு திசை திருப்பும். பூம்புகார் அநேகம் பூர்த்தி செய்யப்பட்டுள்ள வேளையில், மூக்கையூர் அடுத்த வருடம் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. குன்னத்துக்கல்லில் (மன்னார் வளைகுடா) ஒரு புதிய மீன்பிடி இறங்குத் துறைமுகத்தின் அபிவிருத்தியும் நடைபெற்று வருகின்றது.

இந்திய அரசாங்கம் மற்றும் தமிழ்நாடு மாநில அரசும் இழுவைமடிப் படகுகளை பாவனையிலிருந்து அகற்றி புதிய ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளால் மாற்றீடு செய்வதற்கு US$ 56 மில்லியன்களுக்கும் அதிகமான தொகையை ஒதுக்கியுள்ளன. இந்தத் திட்டத்தின் கீழ், இழுவைப் படகுகளை மாற்றீடு செய்வதற்கு புதிய ஆழ்கடல் மீன்பிடிப் படகுகளைக் கொள்வனவு செய்வதற்கு மீனவர்களுக்கு மானியம் வழங்கப்படும். ஆழ்கடல் மீன்பிடித்தலை மேற்கொள்வதற்கு பல்வேறு நிறுவனங்களால் மீனவர்களுக்கு பயிற்சி அளித்தலையும் இது உள்ளடக்குகிறது.

நடைமுறையின் கீழ் உள்ள மற்றுமொரு திட்டம் கடலில் மீனவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான இடையறா தொடர்பாடல் முறையாகும். 17,000 இற்கும் அதிகமான தொடர்பாடல் கருவிகள் மீனவர்களிடையே விநியோகிக்கப்பட்டுள்ளன.

மீன்பிடிக் கலங்களை தடம்பற்றுவதற்கான ஒரு விசேட செய்மதி அடிப்படையிலான தடம் பின்பற்றுகின்ற, மீன்பிடிக் கலக் கண்காணிப்பு முறைமை (VMS), இஸ்ரோவின் GSAT-6 செய் மதியை உபயோகித்து உருவாக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அவர்கள் அறியாத வண்ணம் சர்வதேச கடல் எல்லைகளை அவர்கள் தாண்ட மாட்டார்கள். அது ஸ்தாபிக்கப்படுவதற்காக பரீட்சார்த்தம் செய்யப்படுகின்றது.

கடற்பாசிச் செய்கை (மீன்பிடித்தலுக்குப் பதிலாக) போன்ற பல்வேறு மாற்று வாழ்வாதார நடவடிக்கைகளையும் கூட இந்திய அரசாங்கம் முன்னேற்றுகின்றது.

புத்த பெருமான் கூறியவாறு,''ஒரு பிரச்சினையிலிருந்து தப்புவதற்கான இலகுவான வழி அதனைத் தீர்த்து வைப்பதாகும்''.

**கே 9. புத்தரைப் பற்றிக் கூறுகையில், இந்தியா மற்றும் இலங்கைக்கிடையில் பௌத்த தொடர்புகளை வலுப்படுத்துவதற்கு உங்களது முயற்சிகளின் சில விபரங்களை நீங்கள் பகிர்ந்து கொள்வதற்கு முடியுமா?**

பௌத்தம் என்பது எங்களை ஒன்றிணைக்கும் ஒரு சக்தியாகும். முழு உலகையும் ஒற்றுமைப்படுத்துவதற்கான சக்தியை பௌத்தம் கொண்டுள்ளது என நான் திடமாக நம்புகிறேன்.

புத்தர் இந்தியாவின் ராஜ ஆபரணமென பிரதம மந்திரி மோடி கூறியுள்ளார். புத்த பெருமான் மீது அவர் பெரும் மதிப்புக் கொண்டுள்ளார். ஐ.நா இன் சர்வதேச வெசாக் தின கொண்டாட்டங்களின் பிரதம விருந்தினராக, 2017 மே மாதத்தில் இலங்கைக்கான அவரது விஜயம், புத்தர் மற்றும் அவரது போதனைகள் தொடர்பிலான அவரது ஆழ்ந்த மரியாதைக்கான ஓர் அத்தாட்சியாக உள்ளது. அவரது விஜயத்தின் போது, புனித தலதா மாளிகையில் அவர் தனது பிரார்த்தனைகளை மேற்கொண்டதுடன் மகாநாயக்கர்களிடமிருந்து ஆசீர்வாதங்களையும் பெற்றார். 2015 இல் இலங்கைக்கான விஜயத்தின் போதும் கூட, அநுராதபுரத்திலுள்ள ஸ்ரீ ஜய மகா போதி விருட்சத்திற்கும் தனது வணக்கங்களைத் தெரிவித்தார். அவர் கொழும்பிலுள்ள மகாபோதி சங்கத்திற்கும் விஜயம் செய்தார்.

உங்களுக்கு ஞாபகம் இருக்குமாயின், கடந்த வருடம் சர்வதேச மணற் சிற்பியான திரு. சுதர்சன் பட்நாயக் இலங்கையில், உலகின் மிகப் பெரிய புத்தர் சிலையை மண்ணில் வடித்தார். வெசாக் வைபவத்தில் திக்போய் (அசாம்) எனுமிடத்திலுள்ள உலகின் மிகவும் பழமையான இன்னமும் செயற்படுகின்ற சுத்திகரிப்புச்சாலையில் கைவினையால் உற்பத்தி செய்யப்பட்ட பல ஆயிரம் மெழுகுதிரிகளையும் இந்தியா நன்கொடையாக வழங்கியது.

இந்த வருட வெசாக் தினத்தில், சாராநாத்திலிருந்து புனித பௌத்த சின்னங்களின் காட்சிப்படுத்தல் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டது. அண்மையில், இலங்கை ஆயுதப் படைகளின் 160 அங்கத்தவர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள் ஒரு விசேட இந்திய விமானப் படை விமானத்தில் புத்தகாயாவிற்கு விஜயம் செய்வதற்கு நாங்கள் ஏற்பாடு செய்தோம். விஜயத்தின் பின் அவர்களது கண்களில் மகிழ்ச்சியின் உணர்வுகளை என்னால் காண முடிந்தது.

இந்தியர்களுக்கு இலங்கையில் இராவணனின் எச்சம் தொடர்பான இடங்கள் பிரபல்யமாக இருப்பது போல, இந்தியாவில் பௌத்த சுற்றுலா என்பது இலங்கையர் மத்தியில் மிகவும் பிரபல்யமாக உள்ளது. பிரதம மந்திரி மோடியின் அறிவிப்பின் பின்னர், கொழும்பு-வாரணாசிக்கிடையில் நேரடி விமான சேவையை எயர் இந்தியா ஆரம்பித்தது. கடந்த வருடம், 4 இலட்சம் இந்திய சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு விஜயம் செய்தனர் என்பதுடன் சுமார் 3 இலட்சம் இலங்கைப் பயணிகள் இந்தியாவிற்கு விஜயம் செய்தனர். உண்மையில், இந்தியாவிற்கு விஜயம் செய்யும் இலங்கை யாத்திரிகர்களுக்கு சுமார் 50,000 விசாக்களை கட்டணமின்றி நாங்கள் வழங்கியுள்ளோம். இலங்கையுடனான எங்களது உறவில் மக்களுக்கு மக்களுடனான உறவு வலுவான ஒரு தூணாக உள்ளது.

விசேடமாக இந்தியா மற்றும் இலங்கை இளைஞர்களுக்கிடையில் கூடுதல் தொடர்புகளை நாங்கள் ஏற்படுத்த முடியும். கடந்த வருடம் கண்டியிலுள்ள SIBA இற்கு (இலங்கை சர்வதேச பௌத்த அக்கடமி) அவர்களது பட்டமளிப்பு வைபவத்திற்கான நான் விஜயம் செய்தேன். மாணவர்களுடன் இடைத் தொடர்பாடும் பொழுது ஒரு சிறந்த மற்றும் பிரகாசமான எதிர் காலத்திற்கான தேவையை என்னால் அவர்களிடத்தில் காணக் கூடியதாக இருந்தது. புத்த பெருமானால் காண்பிக்கப்பட்ட பாதை அதனை நாங்கள் நிச்சயம் அடைவதற்கு உதவும்.

விஞ்ஞானம் மற்றும் ஆன்மீகம் என்பவற்றின் புரிந்து கொள்ளுதலின் உயர்ந்த பரப்புகள் பிரிப்பதை விட ஒன்றிணைக்கின்றன என்ற பலமான நம்பிக்கையை நான் கொண்டுள்ளேன்.

**கே 10. கடைசியாக, இலங்கையில் சீனாவின் செல்வாக்கை சமனிலைப்படுத்துவதற்கு இந்தியா முனைவது பற்றி ஊடகங்களில் பல செய்தி உள்ளடக்கங்கள் உள்ளன. அது பற்றி ஏதேகும் கருத்துகள்?**

இலங்கையுடனான எங்களது உறவுகள் அதன் சொந்தப் புரிந்துணர்தல்களிலானவை. ஏதேனும் மூன்றாம் நாட்டுடனான எங்களது உறவில் அவை தங்கியிருக்கவில்லை.

* * * * * *